மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் மாசி மாதம் 17-ம் நாள்
2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் நாள் வியாழக் கிழமை

**<u>EP 49/2022/in/ OS 157/2012</u>**

அம்சம் மரியம்மாள் :: மனுதார் / வாதி

**/எதிர்/**

1. கலாராணி
2. பிரபாவதி :: எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள்

-------

இம்மனுவானது 20-02-2024-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. கருப்பசாமி B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. கணேசன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கு எண்.157/2012 வழக்கில் கண்ட தீர்ப்பாணையின்படி வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை மனுதார் / வாதி வசம், எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி கட்டளை 21 விதி 35-ன் கீழ் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.29 17:22:26 +0530

2) <u>மனுதாரர் /வாதி  தரப்பு மனுச் சுருக்கம்.</u>

அசல் வழக்கனாது மனுதார் / வாதி தரப்பில் வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் , வாதி வசம் ஒப்படைக்க கோரியும், பின்நஷ்டி மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டள்ளது. மேற்கண்ட வழக்கில் இரு தரப்பு முழு விசாரணைக்கு பின்னர் அசல் வழக்கில் வாதிக்கு ஆதரவாக 19-08-2014-ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பாணை உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண்.9/2016 வழக்கானது 09-07-2021-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் தீர்ப்பாணையின் படி பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க தவறியதன் காரணமாக மனுதார் / வாதியால் இந்த நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு எதிர்உரை சுருக்கம்</u>**

மனுச் சங்கதிகள் தவறானதாகும். வாதி இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வழக்குமூலம் இல்லை. அதனடிப்படையில் பெற்ற தீர்ப்பாணையும் செல்லத்தக்கதல்ல. வாதி அவசிய தரப்பினரை சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தினைப் பொறுத்து வாதி விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாக உள்ளது. 2-ம் எதிர்மனுதாரரின் கணவரைப் பொறுத்த விஷயங்கள் தவறானதாகும். எதிர்மனுதார்கள் தரப்பில் SA (MD) No.4929/2023 என்ற இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.29 17:22:31 +0530

மனுதார் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) **<u>பிரச்னைக்கான தீர்வு:</u>**

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், அசல் வழக்கானது 2012-ம் வருடம் மனுதார் / வாதியால் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரியும், பின் நஷ்டி மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு , மேற்படி வழக்கில் இரு தரப்பு விசாரணைக்கு பின்னர் வாதிக்கு ஆதரவாக 19-08-2014-ம் தேதியன்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் படி எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் , தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க தவறியதன் காரணமாக மனுதாரரால் இந்த நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

7) எதிர்மனுதார்கள் தரப்பில் முதல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில், இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு எண். 157 / 2012 வழக்கில் இரு தரப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு , மேற்படி வழக்கில் 19-08-2014-ம் தேதி வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையில்

> " The defendants are directed to hand over the possession of the schedule properties to the plaintiff "

என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9) மேற்கண்ட தீர்ப்பாணை உத்தரவின் படி எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதார் / வாதி வசம் ஒப்படைக்காத காரணத்தினால் மனுதார் / வாதி இந்த நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

10) இந்த அசல் வழக்கானது 2012-ம் வருடம் கோப்புக்கு எடுக்கப்பட்டு 19-08-2014-ம் தேதியில் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.29 17:22:38 +0530

பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு 09–07–2021–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. 2021–ம் வருடம் முதல் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு சுமார் 2 வருடங்களுக்கும் மேலாகியுள்ள நிலையில், தற்போது இரண்டாம் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் , இரண்டாம் மேல்முறையீட்டின் தற்போதைய நிலைப்பாடு குறித்த ஆவணங்கள் எதையும் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. மேலும் , மூல நிறைவேறுதலல் மனு நடவடிக்கையை நிறுத்தி வைக்க எந்த stay உத்தரவும் பெற்றதாக ஆவணங்கள் தாக்கல் இல்லை. எனவே, அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு சுமார் 9 வருடத்திற்கும் மேலாகியுள்ள நிலையிலும் , மேற்படி தீர்ப்பை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில், அசல் வழக்கு தீர்ப்பாணையின் அடிப்படையில் வழக்குரை சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள், மனுதார் / வாதி வசம் ஒப்படைக்க உத்தரவிட்டு நிறைவேறுதல் மனுவை நிறைவேற்ற வேண்டிய கடமை இந்நீதிமன்றத்திற்கு உள்ளதாலும், மனுதார் / வாதி தரப்பு வாதம் தீர்ப்பாணையின் அடிப்படையில் நிரூபிக்கத்தக்கதாக உள்ளது என்பதாலும் மனு அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**11)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | EP 49 / 2022 மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | Delivery by 27-03-2024 ( Batta in 3 days ) |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 29–02–2024–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.29 17:22:46 +0530

FAIR / DRAFT ORDER